பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 04 2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. ஸ்லோவாக் - இந்தியா வர்த்தக கூட்டமைப்பை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று **Bratislava** –வில் தொடங்கிவைத்தார்.

2. அமெரிக்காவில் இருந்த 2008-ஆம் ஆண்டு மும்பை தீவிரவாத தாக்குதல் குற்றவாளி தஹாவூர் ராணா சற்றுமுன்னர் தில்லி கொண்டுவரப்பட்டுள்ளார்.

3. வர்த்தக கட்டமைப்பை கணினி மயமாக்குவது, இளம் தொழில் முனைவோரை ஊக்குவிப்பது போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

4. தலைநகர் தில்லிக்கான பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று தொடங்கிவைத்தார்.

5. ஐ பி எல் கிரிக்கெட்டில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டனாக எம் எஸ் தோனி அறிவிக்கப்பட்டுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>**

ஸ்லோவேக்கியா நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஸ்லோவாக் - இந்தியா வர்த்தக கூட்டமைப்பை **'Bratislava** நகரில் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த வர்த்தக கூட்டமைப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகத்திற்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரும் என்று கூறினார்.

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரம் என்ற இலக்கை எட்டும் நோக்கில், விரைவான வளர்ச்சியை இந்தியா அடைந்து வருவதாக குறிப்பிட்டார்.

வரும் ஆண்டுகளில இந்தியா ஐந்து ட்ரில்லியன்டாலர் பொருளாதாரமாக வளர்ச்சிபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்லோவேக்கியாவில் வலுவான தொழில் கட்டமைப்பு உள்ளதாக குறிப்பிட்ட குடியரசுத் தலைவர், இந்தியா இங்கு புதிய தொழில்களை தொடங்குவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்தார்.

இந்தியாவின் திறன்மிக்க பணியாளர்கள் மற்றும் நிபுணர்கள் ஸ்லோவேக்கியா பொருளாதாரத்திற்கு உந்து சக்தியாக அமைவார்கள் என்றும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

ஸ்லோவேக்கியா நாட்டு அதிபர் திரு **Peter Pelligrini '** பூகோள ரீதியாக இருநாடுகளுக்கும் இடையே தொலைவு அதிகமாக இருந்தாலும், இருதரப்பு உறவுகள் மிகவும் வலுவானதாகவும், நெருக்கமானதாகவும் உள்ளதாக கூறினார்.

இந்தியாவுடன் இணைந்து, பொறியியல் மற்றும் உற்பத்தித்துறையில் ஸ்லோவேக்கியா சிறப்பாக இணைந்து செயல்படும் என்று கூறினார்.

இந்தியாவின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு திறன்கள் ஸ்லோவேக்கியாவில் பெரிய மாற்றங்களை கொண்டுவரும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஸ்லோவேக்கியா - இந்தியா வர்த்தக கூட்டமைப்பு, புதிய வாய்ப்புகளை அளிப்பதோடு மட்டுமின்றி, சிறப்பாகவும் செயல்படும் என்றும் ஸ்லோவேக்கியா அதிபர் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>

வர்த்தக கட்டமைப்பை கணினி மயமாக்குவது, இளம் தொழில் முனைவோரை ஊக்குவிப்பது, புத்தாக்க தொழில்கள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில் வர்த்தக தொழில்நுட்ப கண்காட்சியை காணொலி வாயிலாக இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், நவீன செயல்திறன் மிக்க அணுகுமுறை அரசின் கொள்கைகளை வகுப்பதற்கும், தொழில் துறையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் உதவிடுவதாக குறிப்பிட்டார்.

உலகப்பொருளாதாரத்தின் நுழைவாயிலாக குஜராத் மாநிலம் திகழ்வதாக குறிப்பிட்ட அவர், புதிய தொழில்களுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தித் தருவதில் குஜராத் மாநிலம் முன்னிலையில் உள்ளதாக தெரிவித்தார்.

தகவல் தொழில்நுட்பம் முதல், கட்டமைப்புத் திட்டங்கள் வரை பல்வேறு வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

மூன்று நாட்கள் நடைபெறும் தகவல் தொழில்நுட்ப கண்காட்சியில் 300-க்கும் மேற்பட்ட வர்த்தக தொழில் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.

<<<<<<>>>>

தலைநகர் தில்லிக்கான பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா, தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா ஆகியோர் இன்று தொடங்கிவைத்தனர்.

இந்நிகழ்ச்சியில், தில்லி மக்களுக்கு ஆயுஷ்மான் சுகாதார அட்டைகளையும் அவர்கள் வழங்கினர்.

ஆயுஷ்மான் மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்து லட்சம் ரூபாய் வரை கட்டணமின்றி உயர் மருத்துவ சிகிச்சை பெறும் வகையில் மருத்துவக்காப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

தில்லி அரசு இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாக ஐந்து லட்சம் ரூபாய் வரை மருத்துவக்காப்பீடு வழங்க முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்தும் வகையில், தேசிய சுகாதார ஆணையத்துக்கும், தில்லி அரசுக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று கடந்த வாரம் கையெழுத்தானது.

இத்திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா, உலகின் மிகப்பெரிய மருத்துவக்காப்பீட்டுத் திட்டமாக பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மருத்துவக்காப்பீட்டுத் திட்டம் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ், 62 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், 70 வயதுக்கு மேற்பட்டோருக்கு சமூக பொருளாதார நிலையை கணக்கில் எடுக்காமல், இலவச மருத்துவ சேவை பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளதாகவும் திரு நட்டா தெரிவித்தார்.

<<<<<<>>>>

ஆசிய வர்த்தக சபை மாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தாம் பங்கேற்றது ஆக்கப்பூர்வமானதாக அமைந்திருந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சர்வதேச வர்த்தக கட்டமைப்பில் பெரிய அளவில் மாற்றங்கள் கொண்டுவரப்பட உள்ளதாக தாம் தெரிவித்ததை சுட்டிக்காட்டினார்.

உலகின் தென்பகுதி நாடுகளுக்கான வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு குறித்தும், அந்த நாடுகளின் குரலை உலகிற்கு எடுத்துச் செல்வது குறித்தும் இம்மாநாட்டில் தமது கருத்துக்களை பகிர்ந்துகொண்டதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

அமெரிக்காவில் இருந்த 2008-ஆம் ஆண்டு மும்பை தீவிரவாத தாக்குதல் குற்றவாளி தஹாவூர் ராணா சற்றுமுன்னர் தில்லி கொண்டுவரப்பட்டுள்ளார்.

முன்னதாக, மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த குற்றவாளிக்கு உரிய தண்டனையை உடனடியாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது, வெளிநாடுகளில் தங்கியிருந்த தீவிரவாதிகளை இந்தியா கொண்டுவந்து தண்டனை பெற்றுத்தருவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் திரு பியூஷ் கோயல் குற்றம் சாட்டினார்.

இதனிடையே, தேசிய புலனாய்வு முகமையின் தலைமையகம், பாட்டியாலா நீதிமன்ற வளாகம் மற்றும் தலைநகரின் சில பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் தங்கியிருந்த ராணா, அந்நாட்டு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு நிராகரிக்கப்பட்டதையடுத்து, அந்த நபரை இந்தியா கொண்டுவர நீதிமன்றம் அனுமதி அளித்தது.

முன்னதாக, மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய், செய்தியாளர்களிடம் பேசுகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி பதவியேற்றபின், நாட்டிற்கு எதிரான சக்திகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பொறுப்பேற்றபின், தீவிரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>

மத்திய அரசு கொண்டுவந்துள்ள வக்ஃப் திருத்தச்சட்டம் அரசியல் சாசன ரீதியாக செல்லத்தக்கதா என்பது குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றம் இம்மாதம் 16-ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறது.

தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா, நீதிபதிகள், திரு சஞ்சய் குமார் திரு கே கவி விஸ்வநாதன் ஆகியோர் கொண்ட அமர்வு இந்த மனுக்களை விசாரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மத்திய அரசு கேவியட் மனுவை தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கில், ஒன்றுக்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வக்ஃப் திருத்தச்சட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் அளித்த ஒப்புதலின்பேரில் மத்திய அரசு இந்த சட்டத்தை அரசிதழில் வெளியிட்டுள்ளது.

<<<<<<>>>>

பிரதமரின் போஷான் அபியான் திட்டத்தில் சத்துணவு தயாரிப்பதற்கான செலவுத்தொகையை மத்திய அரசு ஒன்பது புள்ளி ஐந்து சதவீதம் உயர்த்தியுள்ளது.

மழலையர் பள்ளிகள் மற்றும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு மத்திய அரசு உதவியுடன் உணவு வழங்கும் திட்டம் நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், அதிகரிக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கான செலவுத்தொகை நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் இதற்கென கூடுதலாக தொள்ளாயிரத்து 54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பிரதமரின் போஷான் அபியான் திட்டத்திற்கு இந்திய உணவுக்கழகத்தின் மூலம் 16 லட்சம் டன் உணவு தானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான மொத்த செலவையும் மத்திய அரசு மானியமாக வழங்குகிறது.

**<<<<<<>>>>**

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக அடுத்த இரண்டு நாட்களுக்கு தமிழகத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திருமதி அமுதா தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதை தெரிவித்த அவர், கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

**<<<<<<>>>>**

ஐ பி எல் கிரிக்கெட்டில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டனாக எம் எஸ் தோனி அறிவிக்கப்பட்டுள்ளார்.

காயம் காரணமாக ருத்ராஜ் கெய்வாட் கேப்டன் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

**<<<<<<END>>>>**